Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 137 | திங்கட்கிழமை | பங்குனி 30 ஆம் நாள் 12 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கொரோனா தொற்றால் இருவர் சாவு!

கொழும்பு, ஏப்.12

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் இருவர் உயிரிழந்துள் 14

# வடக்கில் நேற்றும் 42 பேருக்குத் தொற்று

## சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12

வடக்கு மாகாணத்தில் நேற்றும் 42 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 22 பேர் யாழ்ப்பாணம் மாநகர சந்தைத் தொகுதி மற்றும் கடைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடை 14

## கொரோனாத் தொற்றால் யாழில் 11ஆவது மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 12

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை விடுதியில் தங்கிநின்று சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து முல்லேரியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட மயிலிட்டியைச் சேர்ந்த 70 வயது முதியவர் நேற்று ஞாயிறுக்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார 14

## கொரோனாக் கட்டுப்பாட்டில் மக்களுக்கு அக்கறையில்லை

### பொலிஸ் பேச்சாளர் வேதனை



கொழும்பு, ஏப்.12

கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முழுமையாக மீறப்படுகின்றன. சமூக இடைவெளி, மாஸ்க் அணிதல் என்பவையும் பின்பற்றப்படவில்லை என்று பொலிஸ் பேச்சாளர் 14

## யாழ்ப்பாண நகரில் 6 கடைகளுக்கு பூட்டு

யாழ்ப்பாணம், ஏப்.12

கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் நகரத்தில் 6 கடைகள் நேற்று மூடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் 431 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு முல்லேரியா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவற்றின் பரிசோதனை அறிக்கைகள் நேற்றுக் கிடைத்த நிலையில் அவர்களில் 22 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

தொற்று உறுதிப்படுத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று 14

## ஒன்றரை வருடங்களாக திருட்டு; வலிகாமத்தில் இருவர் கைது!



யாழ்ப்பாணம், ஏப்.12

வலிகாமம் வடக்கில் தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்ய 14

## சித்திரை புத்தாண்டு வரை சூரியன் உச்சத்தில்!

கொழும்பு, ஏப்.12

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு வரை இலங்கைக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கும். சூரியனின் வடதிசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக இந்தக் கால நிலை நிலவும் என்று வானிலை 14

# கலப்பட மது உற்பத்தி யாழில் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்ப்பாணத்தில் மதுபானத்தில் கலப்படம் செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனிப் பாணி, எதனோல் மற்றும் எசென்ஸ் என்பவை கலக்கப்பட்டு, கலப்பட மதுபானம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். 14

முச்சந்தி முரளி



"கொரோனாதான் உச்சத்தில எண்டு பார்த்தால் இப்ப சூரியனும் உச்சத்துக்கு போகுது பாருங்கோ"

## அரச, தனியார் வங்கிகள் இன்று இயங்கும்

கொழும்பு, ஏப்.12

அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இன்றைய விசேட விடுமுறை அரச ஊழியர்களுக்கு மாத்திரமே பொருந்தும். வங்கி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 12 ஆம் திகதி விசேட விடுமுறை தினமாக கடந்த 10 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

10 மற்றும் 11 ஆம் திகதிகள் வார இறுதி நாள்கள் என்பு 14

## போக்குவரத்துத் திணைக்களம் இன்று இயங்கும்

கொழும்பு, ஏப்.12

யாழ்ப்பாணம் உள்ளிட்ட 7 இடங்களிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகங்கள் இன்று வழமைபோன்று இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சிறப்பு விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமை அலுவலகமான நாரஹேன்பிட்டி, வெரஹெர சாரதி அனுமதிப்பத்திர அலுவலகம், குருநாகல், கம்பஹா, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாண அலுவலகம் ஆகியவையே இன்று இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிப்பொறிமுறையை இலங்கை நிறுவவில்லை

*அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 12

இலங்கைப் போரின் போதான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான நீதிப்பொறிமுறைய இலங்கை இன்னமும் நிறுவவில்லை. இதற்கான வாக்குறுதியை வழங்கியிருந்தும் அதனை நிறைவேற்றவில்லை. இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அல்லது மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையொன்றை நிறுவுதல் போன்ற வாக்குறுதிகளும் இன்னமும் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. அதேநேரம், இலங்கையின் மனித உரிமைகள் பற்றிய ஏனைய கவலைகள் எழுந்துள்ளன. ஆட்சிமுறையின் ஜனநாயக பண்புகளை நிலைநாட்டி, சட்டத்தின் ஆட்சியை மதிப்பதோடு சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். தெற்காசியாவின் மிகப் பழைய ஜனநாயக தேசத்தின் ஜனநாயக நண்பன் என்ற வகையில் அமெரிக்கா இலங்கையிடத்தில் இந்த விடயங்களை எதிர்பார்க்கிறது. - என்றார். (ஒ-இ)

*பயங்கரவாத சட்டத்தின்*

# புதிய விதிமுறைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

**கொழும்பு, ஏப். 12**

**பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (பி.ரி.ஏ.) கீழ் வெளியிடப்பட்ட புதிய விதிமுறைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

அரசமைப்பின் 10, 12, 13 மற்றும் 14 ஆம் சரத்துகளில் உள்ள உரிமைகளை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிமுறைகள் மீறுகின்றமைக்கு எதிராகவே குறித்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிமுறைகளில் நாட்டுப் பிரஜைகளின் பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகியவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விதிமுறைகள் பரந்த அளவில் காணப்படுகின்றமையால், அவற்றை நடைமுறைப் படுத்தும்போது அவை சட்டவரையறையை மீறக்கூடிய சாத்தியம் உள்ளன என்றும் மேற்பார்வைக்கான பொறிமுறை காணப்படவில்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, பயங்கரவாத தடைச்சட்டத்தின் அதிகார வரையறையை மீறும் வகையில் இந்த புதிய விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்ட அதிகாரங்கள் காணப்படுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இன, மத அடிப்படையில் எதிர்மறையான கருத்துக்களை தோற்றுவிக்கக்கூடியவையாகவும், இன, மத குழுக்களுக்கு எதிர்மறையான தாக்கத்தை செலுத்துபவையாகவும் உள்ளன என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

# கள் உற்பத்தித் தொழிலாளர்களுக்கு ஒரு லட்சம் ரூபா கடன்திட்டம்!

*இராஜாங்கஅமைச்சர் உறுதிமொழி*

சாவகச்சேரி, ஏப். 12

பனை, தென்னை மற்றும் கித்துள் மரங்களில் கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு காப்புறுதி செய்யவும், அனைத்து சீவல் தொழிலாளர்களும் தமது தொழில்களை விருத்திசெய்யவும் வங்கிகள் ஊடாக ஒரு லட்சம் ரூபா வரை கடன் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து கித்துள், தென்னை, பனை அபிவிருத்தித் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருசாந்த பத்திராஜ் தலைமையில் சபையின் அலுவலகத்தில் கடந்தவாரம் நடைபெற்றது. அதில் கித்துள், தென்னை, பனை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் குறித்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-9)

# கோத்தா, மஹிந்த, பஸில் சிறந்த ஆட்சியாளர்களாம்!

*கூறுகிறார் இசாக் எம்.பி.*

கிண்ணியா, ஏப். 12

இந்த நாட்டில் யார் ஆட்சிக்கு வந்தாலும், கோத்தாபய, மஹிந்த மற்றும் பஸில் போன்ற நல்லதொரு தலைவர்களை இனிக் காண முடியாது. நாட்டை திறம்பட அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல அவர்களால் மட்டுமே முடியும் இவ்வாறு அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் தெரிவித்தார். கிண்ணியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் சிலரின் இனவாதப் பேச்சுக்களை நம்பி ஏமாறக்கூடாது. நாட்டில் இனவாதம், மதவாதம் ஒழிய வேண்டும். நாம் கௌரவமாகவும், சிறுபான்மை சமூகமாகவும் வாழவேண்டுமானால், தற்போது இருக்கின்ற ஆட்சியாளர்களுடனேயே இணைந்து வாழ வேண்டும். அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடாது. அண்மையில் எமது நாட்டுக்கு வருகை தந்த பாகிஸ்தான் பிரதமரும் அதனையே கூறிச் சென்றுள்ளார் -என்றார். (ம-4)

# தமது கட்சி உறுப்பினர்களிடம் ஐ.தே.க. உறுதிமொழி பெறுவதா?

*கண்டிக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி*

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட விரும்பும் உள்ளூராட்சி உறுப்பினர்களிடம், ஐக்கிய தேசியக் கட்சி உறுதி மொழியை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதைக் கண்டிக்கின்றோம். இது உறுப்பினர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

> இரு தசாப் தங்களுக்கும் அதிக காலம் ஆட்சியைக் கைப்பற்ற முடியாத நிலைக்கு கட்சியை பலவீனப்படுத்திய தலைமைத்துவம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கு கடிதமொன்றை அனுப்பி அவர்களிடம் உறுதி மொழியை பெற்றுக் கொள்ள முன்னெடுக்கப்படும் முயற்சியானது அந்த உறுப்பினர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடாகும். இரு தசாப்தங்களுக்கும் அதிக காலம் ஆட்சியைக் கைப்பற்ற முடியாத நிலைக்கு கட்சியை பலவீனப்படுத்திய தலைமைத்துவம் தொடர்பில் சோர்வடைந்த ஆதரவாளர்கள் கட்சி முழுமையாக மாற்றமடைய வேண்டும் என்பதையே எதிர்பார்த்தனர். எனினும், அதற்கு வாய்ப்பளிக்காமல் ராஜபக்சக்களுடன் இரகசிய கூட்டணியமைத்து கட்சியையும் ஆதரவாளர்களையும் ஏமாற்றியமைக்கான பிரதிபலன் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கப் பெற்றது. முதலாவது நாடாளுமன்றத்திலிருந்து உறுப்பினர்களைக் கொண்டிருந்த கட்சி தற்போதைய நாடாளுமன்றத்தில் ஓர் ஆசனத்தைக் கூட பெற்றுக்கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி குறுகிய காலத்துக்குள் நாடாளுமன்றில் எதிர்க்கட்சியாகியுள்ளது. இந்த வெற்றியின் காரணமாக எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக உள்ளூராட்சி உறுப்பினர்கள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர். இதனை தடுப்பதற்காக உறுதி மொழி எடுக்க முற்படுவது போன்ற மேலாதிக்கமான ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடும் ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. -என்றுள்ளது. (த-இ)

# ஊடகவியலாளர்மீது பொலிஸார் தாக்குதல்

*சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்*

கொழும்பு, ஏப். 12

சுயாதீன ஊடகவியலாளரும், புகைப்படக் கலைஞருமான மலிக அபேகோன் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கத்தால் கொழும்பில் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, ஊடகவியலாளர் மலிக அபேகோன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மலிக அபேகோன் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார் என்று அவர் சார்பிலான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் 'மலிக அபேகோன் தாக்கப்படவில்லை' என்று பொலிஸார் நீதிமன்றத்தில் மருத்துவ அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர் தரப்பில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக சிறைச்சாலை மருத்துவ அதிகாரி மூலம், மீண்டும் மருத்துவ அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு மாலிகாகந்த நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை இன்று வரை ஊடகவியலாளரைத் தடுப்புக்காவலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்: 19ஆம் திகதி இறுதி முடிவு

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 12

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

பிரதமர்மஹிந்தராஜபக்சதலைமையில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்படும் எனவும் அவர் கூறினார்.

'மாகாண சபைத் தேர்தலை உத்வேகத்துடன் எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயாராக இருக்கின்றது. அத்துடன் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் அனைத்துப் பங்காளிக் கட்சிகளும் பிரிந்து நின்று மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளப்போவதில்லை. புதிய மாகாண சபை சட்டம் தொடர்பாக இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த பிரச்சினை தீர்க்கப்படும்' என்றார். (ஒ.22)

# அதிகாரமில்லாததையே மணிவண்ணன் செய்தார்

## *அவைத் தலைவர் சி.வி.கே. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 12



வாகனத் தரிப்பிடக் கட்டணம் வசூலிக்க மாநகர சபைக்கு இடமுண்டு. தண்டப் பணம் அறவிட மாநகரசபைக்கு அதிகாரமில்லை. தண்டப் பணம் அறவிடுவதற்கு மாநகர காவல் படையை உருவாக்கியது சட்டவிரோதமானது.

இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவரும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இணைய ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்ததாவது:

கொழும்பு மாநகர சபை ஒரு ஆளணியை உருவாக்கியது. அந்த ஆளணி மாநகரசபைக்குச் சொந்தமான இடங்களில் வாகனம் நிறுத்தும்போது கட்டணங்களை அறவிடுவதற்கே உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் மணிவண்ணன் உருவாக்கிய காவல் படை தண்டப் பணம் அறவிடுவதற்கு. மாநகர சபைக்கு தண்டப்பணம் அறவிடுவதற்கு அதிகாரம் இல்லை- என்றார். (ஒ.இ)



# மைத்திரி – மஹிந்த திடீர் சந்திப்பு

கொழும்பு, ஏப். 12

ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள் வலுப்பெற்று வரும் சூழலில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. கொழும்பிலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை இரு தரப்பும் வெளியிடவில்லை. (ஒ.இ)

# சைனோஃபோர்ம் தடுப்பூசி தொடர்பில் இலங்கையே முடிவெடுக்கவேண்டும்

## உள்ளக விவகாரங்களில் சீனா தலையிடுவதில்லையாம்

கொழும்பு,ஏப்.12

இலங்கையின் உள்ளக விவகா ரத்தில், சீனா ஒருபோதும் தலையிடப் போவதில்லை. எனவே சைனோஃபோர்ம் கொரோனாத் தடுப்பூசி விடயத்தை இலங்கையே தீர்மானிக்க வேண்டும் என்று இலங்கையில் உள்ள சீனத் தூதர்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனத் தூதரகத்தின் ஊடகப்பேச்சாளர் லு சொங் தெரிவித்ததாவது,

இலங்கை அரசின் வேண்டுகோளின்பேரிலேயே 6 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த தடுப்பூசியை யாருக்கு, எங்கு, எப்படி வழங்க வேண்டும் என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க வேண்டும். சீனா இதுவரையில் தனது நட்பு நாடுகளுக்காக 133.8 மில்லியன் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கியுள்ளது- என்றார்.

இலங்கைக்கு 6 லட்சம் சைனோஃபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகளை சீனா வழங்கியிருந்தது. இதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றிலும், வெளியிடங்களிலும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

இலங்கை சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தும்வரையில்சைனோஃபோர்ம் யாருக்கும் வழங்கப்படாது. இலங்கையில் உள்ள சீனப் பிரஜைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

அவசரகால பயன்பாட்டுக்காக உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்கும் வரை இலங்கையர்களுக்கு அது பயன்படுத்தப்படாது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதேவேளை சைனோஃபோர்ம் தடுப்பூசியின் பாதுகாப்பு, செயற்திறன் மற்றும் தரம் ஆகியவை தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஊடாக முறையான அனுமதி அளிக்கப்படும் வரை அந்தத் தடுப்பூசி பயன்படுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும் கொழும்பில் உள்ள அனைத்து சீன பிரஜைகளுக்கும் சைனோஃபோர்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ம-4)

# தடுப்பூசி தொடர்பில் மழுப்பலான பதில்

கொழும்பு, ஏப். 12

இந்தியாவிடமிருந்து அடுத்த கட்ட தடுப்பூசி இலங்கைக்கு எப்போது கிடைக்கும் என்பது தொடர்பில் இந்தியத் தூதரகம் பதிலளிக்கவில்லை. கடந்த காலங்களில் 1.2 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன என்ற பதிலையே அது வழங்கியுள்ளது.

இந்தியா தயாரிக்கும் கொரோனாத் தடுப்பூசிக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதியளித்திருந்தது. இதற்கு அமைவாக இந்தியாவிடமிருந்து அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்தன. 5 லட்சம் தடுப்பூசிகளை இந்தியா நன்கொடையாக வழங்கியது. இதன் பின்னர் இலங்கை மேலதிகமாக கொள்வனவு செய்திருந்தது. இலங்கையில் முன்களப் பணியாளர்கள், படையினர் உள்ளிட்ட 9 லட்சத்துக்கு அதிகமானோருக்கு கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. அவர்களுக்கு இன்னமும் இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் ஏற்றப்படவில்லை. இந்தியாவின் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களுக்கு அதே தடுப்பூசியே இரண்டாம் கட்டத்திலும் ஏற்றப்படவேண்டும் என்பதால், இந்தியாவிடம் கொள்வனவுக்காக கோரிக்கை விடுக்கப்பட்ட தடுப்பூசிகளை இலங்கை எதிர்பார்த்துள்ளது. அது எப்போது இலங்கைக்கு கிடைக்கும் என்பதற்கான பதில் இந்தியத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. (ஒ.5)

# நாம் விடுவித்தவர்களில் மணியும் ஒருவரே!!!

## ஆட்சியமைக்க ஆதரவு கொடுத்த எமக்கு பொறுப்புண்டு என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மணிவண்ணன் தரப்பு ஆட்சியமைப்பதற்கு நாங்கள் ஆதரவளித்தோம். சபையை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைக்கவேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. பிரச்சினையில் சிக்கியுள்ள தமிழ் மக்களை மீட்டு சரியான வழியில் தொடர்ந்தும் செயற்பட வைக்கும் பொறுப்பும் உண்டு. அதனடிப்படையில் நாம் விடுவித்த ஆயிரம் பேரில் மணிவண்ணனும் ஒருவர். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனுக்கு பிணை வழங்கியது அரசா? நீதிமன்றமா? என்று கேள்வியெழுப்பியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பதிலளிக்க வேண்டுமென தெரிவித்திருந்தார். அது தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது.

நான் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவே செயற்பட்டு வருகிறேன். இரு தரப்பும் எதிரும் புதிருமாக செயற்பட்டு, மீண்டும் அழிவுகரமான சூழல் ஒன்று ஏற்படும் நிலைமையை உருவாக்கக்கூடாது.

அதையே நான் நிறைவேற்றி வருகிறேன். அதை அரசும் அறியும். பொலிஸாரும் அறிவார்கள்.

இன நல்லிணகத்துக்கு எதிராக செயற்படும் விக்னேஸ்வரன் போன்றவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பது எனது வழக்கமல்ல. முன்னாள் போராளிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் இப்படியான நெருக்கடிக்குள் சிக்கும் போது, என்னிடம் வருகிறார்கள். அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிறேன். ஆனால் அவர்கள் யாரும் வெளியில் சொல்லாததால் விக்னேஸ்வரன் போன்றவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். இப்படி ஏராளமானவர்கள் என்னிடம் வருகிறார்கள். பிரச்சனையில் சிக்கியவர்கள் வெளியில் வருகிறார்கள். அவர்களில் ஒருவரே மட்டுமே மணிவண்ணன்-என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் கசிவால் பாதிப்பு;

## நியூ டயமண்ட் கப்பல் நிறுவனத்திடம் இழப்பீடு கோரியது இலங்கை அரசு

கொழும்பு,ஏப்.12

எண்ணெய் கசிவால், இலங்கை சமுத்திர எல்லைக்குள் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கு, 3 ஆயிரத்து 423 பில்லியன் ரூபா இழப்பீடு செலுத்த வேண்டும் என்று நியூ டயமண்ட் கப்பல் நிறுவனத்தின் சட்டத்தரணிகளுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

நியூ டயமண்ட் கப்பலின் இலங்கையிலுள்ள நிறுவனத்துக்கு, சட்டமா அதிபரால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹதபுர தெரிவித்துள்ளார். 2020ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அம்பாறை சங்கமன்கண்டி இறங்குதுறையில் இருந்து 38 கடல்மைல் களுக்கு அப்பால் உள்ள கடற்பிராந்தியத்தில் இந்தியா நோக்கிச் சென்ற கப்பலில் தீப்பரவல் ஏற்பட்டது.

இந்தத் தீப்பரவலைத் தொடர்ந்து கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எண்ணெய் கொள்கலன்களில் கசிவு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

# அரசியல் பின்புலத்துடனேயே வவுனியாவில் மாடுகள் அறுப்பு

## சிவசேனை அமைப்பின் வவுனியா கிளை விசனம்

வவுனியா,ஏப்.12

அரசியல்வாதிகள் தமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மாடறுப்பு செயற்பாட்டில் ஈடுபட்டுவருகின்றனர் என்று சிவசேனை அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் தமிழ்த்திரு அ.மாதவன் தெரிவித்தார்.




'இலங்கை அரசமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை வழங்கு, மதமாற்றத் தடைச்சட்டத்தை ஏற்படுத்து, மாடு வெட்டத் தடை விதி" போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்திய அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று வவுனியா சிதம்பரபுரம் பழனிமுருகன் கோவிலில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பகுதிகளிலும் பசுவதை செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. சில அரசியல் வாதிகள் தமது அரசியல் பலத்தை வைத்துக்கொண்டு சட்டத்துக்குப் புறம்பான வகையில் அதிகளவான மாடுகளை வெட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவைப் பொறுத்தவரை பசுவதை செயற்பாடுகளை யார் முன்னெடுக்கின்றார்கள் என்பது அனைவருக்குமே தெரிந்திருக்கும். எனவே இந்த செயற்பாடுகள் உடனடியாக முற்றாக நிறுத்தப்படவேண்டும். அத்துடன் ஒருவரது மனோநிலையைப் பயன்படுத்தி மதமாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. இவை தடுக்கப்படவேண்டும். - என்று தெரிவித்தார். (த-110)



## காணியற்ற விவசாயிகளுக்கு வயல் நிலங்களை பகிருங்கள்

***மாந்தை கிழக்கு தவிசாளர் கோரிக்கை***

முல்லைத்தீவு, ஏப்.12

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் வயல் நிலங்களற்ற குடும்பங்களுக்கு வயல் நிலங்களை வழங்குங்கள் என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் எம்.தயானந்தன் தெரிவித்தார்.

வவுனிக்குளத்துக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வவுனிக்குளத்தின் கீழ் வயல் நிலங்களுக்கான ஆவணங்களுடன் பல குடும்பங்கள் உள்ளன. அவர்கள் தங்களுடைய காணிகளை துப்பரவு செய்வதற்கு மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை வவுனிக்குளத்தின் கீழ் வயல் நிலத்துக்கான நிலம் உள்ளது. பல குடும்பங்கள் வயல் காணிகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. இக்குடும்பங்களைத் தெரிவு செய்து குறைந்தது ஒரு ஏக்கரையாவது வயல் நிலமாக வழங்க வேண்டும் - என்றார்.

இதன்போது வயல் நிலங்களுக்கு ஆவணங்கள் உள்ளவர்கள் தமது காணிகளைத் துப்பரவு செய்ய முடியும். வயல் நிலமற்றவர்களுக்கு காணி வழங்குவது தொடர்பாக மாவட்டச் செயலாளருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (ப-13)

## பிரேமலாலுக்கு நீதி ரஞ்சனுக்கு அநீதியா?

*சபாநாயகரைச் சாடுகிறது ஐ.ம.ச.*

கொழும்பு,ஏப்.12

நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜெயசேகர நாடாளுமன்றுக்கு வருவதற்கு அனுமதியளித்த சபாநாயகர், அதே உரிமையை ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கத் தவறிவிட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தங்களின் பக்கச்சார்பான நடவடிக்கைகள், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சிகள் பிரேரணையொன்றை எதிர்க்கின்ற போது, நீங்கள் அதனை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றீர்கள். இதனை நாங்கள் பலமுறை அவதானித்துள்ளோம். உங்கள் நடவடிக்கைகள் நாடாளுமன்றின் கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்று நாங்கள் கரிசனையடைந்துள்ளோம். நீங்கள் பொதுஜன பெரமுனவின் அரசியலில் ஈடுபட்டுள்ளீர்கள் என்றும் அறிகின்றோம். நாடாளுமன்றின் 225 உறுப்பினர்களின் தலைவரான நீங்கள் சபாநாயகர் என்ற பதவியின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும்- என்றுள்ளது. (ப-4)

## டயானாவுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,ஏப்.12

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல், நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகேக்கு எதிரான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப்பிரிவு ஆரம்பித்துள்ளது. இவர் தனது பிரிட்டிஷ் குடியுரிமைத் தகவல்களைத் தெரிவிக்காமல் அதிகாரப்பூர்வமாக இலங்கைக் கடவுச்சீட்டை மோசடி செய்துள்ளார் என்று, 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐ.தே.க சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஓஷல ஹேரத் முறைப்பாட்டை வழங்கியுள்ளார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பி அறிக்கையின் படி, தவறான தகவல்களை வழங்கியமைக்காக, தண்டனைச் சட்டத்தின் 175 ஆவது பிரிவின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் இலங்கையில் புலம்பெயர்ந்தோர் மற்றும் குடியேறியவர்கள் சட்டத்தின் 45 (1) (அ) மற்றும் 45 (1) (சி) பிரிவுகளின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்தில் 'பி' அறிக்கையை தாக்கல் செய்துள்ள மனித கடத்தல் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு (ஏ.எஸ்.ஐ.பி), குடிவரவு மற்றும் குடிவரவு கட்டுப்பாட்டு ஆணையாளருக்கு தவறான தகவல்களை வழங்கியதன் மூலம், அவர் இலங்கை கடவுச்சீட்டை பெற்றுள்ளார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ப-4)

## 8ஆம் திகதிய சோதனையில் ஒருவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, ஏப். 12

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கடந்த 8ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




யாழ்.நகரப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருபவர்கள் மற்றும் தென்மராட்சிப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் என 35 பேருக்கு அன்றையதினம் பி.சி.ஆர். எடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர்களுக்கு தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் மற்றும் தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் உள்ளிட்ட 41 பேருக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர்.பரிசோதனை மாதிரிகள் பெறப்பட்டன. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# விதைப்பது எதுவோ அறுவடையும் அதுவே

நாளைமறுதினம் சித்திரைப் புத்தாண்டு. கடந்த வருடம் கொரோனாப் பெருந்தொற்று என்ற ஒருமுனைப் போராட்டத்துக்குள் சித்திரைப் புத்தாண்டு பிறந்தது. கடந்த வருடத்துடன் இந்தத் துன்பமெல்லாம் தம்மைவிட்டு விலகியோடும் இந்த வருடமாவது நிம்மதியாகப் புத்தாண்டுப் பிறப்பை எதிர்கொள்ளலாம் கொண்டாடலாம் என்ற இலங்கை வாழ் மக்களின் மனங்களில் தற்போது இடி இறங்கியிருக்கின்றது. ஏற்கனவே இருந்த கொரோனாத் தொற்று தற்போது இரட்டிப்பாகியுள்ள நிலையில், புற்றுநோய் என்ற பேரரக்கனும் கொரோனாவுடன் இணைந்துள்ளான். ஆக, இம்முறை இருமுனைப் போராட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது இலங்கைத் தீவு.

கடந்த வருடம் கொரோனாவுக்கு எதிரான கட்டுப்பாடுகள், நடைமுறைகள் மிக இறுக்கமாக இருந்தன. மக்கள் ஓரளவேனும் அச்சமின்றி நடமாடக்கூடிய – தமது அன்றாட நாளை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தனர். ஆனால் இந்த வருடம் நாட்டின் பொருளாதார உறுதியற்ற நிலை காரணமாக நினைத்தபாட்டுக்கெல்லாம் நாடு திறந்துவிடப்பட்டுள்ளது. எமக்குத் தொற்றேற்படுவது இன்றோ அல்லது நாளையோ என்ற நிலையில்தான் தற்கால நாள்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. எமக்கு நெருக்கமானவர்கள் கொரோனாவுக்கு ஆட்படுவதை நாம் அனைவரும் கண்ணெதிரே கண்டுகொண்டிருக்கின்றோம். நிலைமை இவ்வாறிருக்க கொரோனாவுடன் இணைப்பாட்டம் போட்டு மிரட்டிக் கொண்டிருக்கின்றது புற்றுநோய்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைத் தீவுக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் மற்றும் பருப்பு உள்ளிட்ட சில பொருள்களில் தீவிர புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய மூலப்பொருள் உள்ளமை தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திகள் புறக்கணிக்கப்படுகின்றமை மற்றும் உறுதியற்ற இறக்குமதிக் கொள்கை என்பவை காரணமாகவே இந்தப் பேராபத்தான நிலைக்குள் இன்று நாம் வலிந்து தள்ளப்பட்டுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்குள் நாடு உள்ளது என்பதற்காக கண்மூடித்தனமான பொருளாதாரக் கொள்கையை பின்பற்ற முடியாது. பணம் என்ற ஒன்றையே பிரதானமாகக் கொண்டுகண்டகண்ட பொருள்களின்விற்பனைக்காகவும் அரசு நாட்டைத் திறந்துவிட்டதன் பாரதூரமான விளைவுதான் இது. இந்தப் பேராபத்து ஆட்சியாளர்களை அல்ல மக்களைத்தான் சூழப்போகின்றது.

உள்ளூர் உற்பத்திகளை விட, வெளிநாட்டு உற்பத்திகள் தரமானவை என்ற பிம்பம் எம்மவர்களுக்கு மிகையாகவே உள்ளது. தேங்காய் எண்ணெய் உற்பத்திகளை தன்னிறைவு அடிப்படையில் இலங்கையிலேயே மேற்கொண்டிருக்கலாம். ஆனால், அது அவ்வளவாக நாடப்படாத பட்சத்தில்தான் வெளிநாடுகளில் இருந்து அதைக் கொண்டுவரும்படியான நிலை ஏற்பட்டது. அந்த அடிப்படையில் இதற்கு நாம் ஒவ்வொருவரும்தான் பொறுப்பாளிகள்.

புலிகளை மட்டும் வைத்து, பெரும்பான்மை மக்களுக்கு பூச்சாண்டி காட்டியும், சிறுபான்மை மக்களை அடக்குமுறையால் அச்சுறுத்தியும் தம் வாக்குவங்கிகளை தக்க வைக்க எத்தனித்துக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் குறைந்த பட்சம் பெரும்பான்மை மக்களுக்காவது விசுவாசமாக இருந்திருந்தால் இந்த இருமுனைப் போராட்டம் ஒருமுனைப் போராட்டமாகக் குறைந்திருக்கும். அந்த ஒருமுனைப் போராட்டத்தை எதிர்கொள்ளும் திடமும் நம்பிக்கையும் உள்ளவர்களாக மக்களும் இருந்திருப்பர்.

அத்துடன், இலங்கையில் தாராளமாக உற்பத்திசெய்து தன்னிறைவு காணவேண்டிய பொருள்களின் கேள்விக்கும்கூட, வெளிநாடுகளை நம்பியிருக்க வேண்டிய பிற்போக்கான பொருளாதாரக் கொள்கைக்கும் கண்மூடித்தனமான கொள்வனவுகளுக்கும் கொடுத்த முக்கியத்துவத்தின் விளைவுதான் இது. எதை விதைத்தோமோ அதைத்தானே அறுவடை செய்யலாம்.




# இந்திய மீனவர்களை அழைக்கும் முயற்சியை டக்ளஸ் கைவிட வேண்டும்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 12**

**வடக்கு கிழக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொழில் செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும். தவறின், புது வருடம் பிறந்த கையுடன் பெரும் போராட்டத்தை மேற்கொள்ளவேண்டிவரும்.**

இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கமும் இணைந்து வலியுறுத்தியுள்ளன. யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்ததோடு, 13 அம்சக் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

30 வருடங்கள் போர்ச் சூழலில் பாதிக்கப்பட்ட வட பகுதி மீனவச் சமூகம் இன்றுவரை போர் நிலைமைக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றது. அவ்வாறிருக்கையில், இந்திய மீனவர்கள் வட பகுதி கடற்பரப்பில் இழுவை மடி கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றமை, தென்னிலங்கை மீனவர்களின் மிதமிஞ்சிய வருகை, சட்டவிரோத மீன்பிடி முறையால் ஏற்படுகின்ற பிரச்சினைகள், உள்ளூர் இழுவை மடிகள் தொழிலில் ஈடுபடுகின்றமை, போரால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் இன்றுவரை சரியான முறையில் தமது தொழிலை ஆரம்பிக்க முடியாமை, மீனவர்களின் பல பூர்வீக நிலங்கள் இன்றுவரை பாதுகாப்பு படையினர் வசமுள்ளமை, இறங்குத்துறைகள் விருத்திச்செய்யப்படாமை மற்றும் மீனவப் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் ஆகியவை உட்பட பலபிரச்சினை களை மீனவர்கள் நாளாந்தம் எதிர்கொள்கின்றனர். இந்திய மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவுள்ளோம் என்று கடற்றொழில் அமைச்சர் கூறியிருந்தார். எனினும், அது தொடர்பாக ஆக்கபூர்வமான எந்தவிதமான செயற்பாடுகளையும் அவர் முன்னெடுக்கவில்லை.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்வதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று அவர் முன்மொழிந்து மேற்கொள்கின்ற முயற்சிகளை வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் என்ற வகையில் இதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். அத்தோடு வட பகுதி மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர், சட்டமா அதிபர் மற்றும் பொறுப்புமிக்கவர்களுக்கு சில கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா மேற்கொள்ளும் முயற்சிகளை கைவிட வேண்டும். வெளிநாட்டுப் படகுகள் சர்வதேச கடல் எல்லையைத்தாண்டி இலங்கை கடல் வளங்களை அழிப்பதை தடுப்பதற்காக 2017 இலக்க 11 இழுவை மடி தடைச் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்திய இழுவை மடி படகுகளால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் சொத்து அழிவுகள் தொடர்பாக ஆராய்வதற்கான அதிகாரமிக்க குழு ஒன்றை நியமித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் சொத்து விவரங்களை திரட்டி மீனவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்திய இழுவை மடி படகுகளில் தொழிலுக்காக வருகின்றவர்கள் மீன்பிடி தொழிலாளர்கள் இவர்கள் படகு உரிமையாளர்களின் அழுத்தத்தின் காரணமாகவே இலங்கை கடற்பரப்புக்குள் வருகின்றனர். எனவே கைது செய்யப்படும் அப்பாவி மீனவர்களை சர்வதேச உடன்படிக்கையின் அடிப்படையில் உடனடியாக விடுதலை செய்து படகுகளை அரச உடைமையாக்க வேண்டும். தென்னிலங்கை மீனவர்களின் மிதமிஞ்சிய வருகை மற்றும் அவர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத மீன்பிடிப் பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைமைத்துவப் பெண்களின் மீன்பிடித் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த ஏனைய தொழில்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். வட மாகாண கடற்றொழில் இணை முகாமைத்துவ செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். வெளிநாட்டுப் படகுகள் இலங்கை கடற்பரப்பில் தொழில் செய்ய அனுமதியளிப்பதை நிறுத்துவதோடு, இதுவரை அவ்வாறான அனுமதிகள் வழங்கப்பட்டிருப்பின் அவைகளை இரத்துச் செய்ய வேண்டும்.

- என்று கேட்டுக்கொண்டுள்ளனர். (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாகத் தொடங்குகிறது. அதன்படி அனைத்து ராசியினதும் பலன்களைப் பார்ப்போம்.**

பிலவ வருட

# தமிழ்ப்புத்தாண்டு ராசிபலன்கள்

தர்மத்தின் வடிவமான இடபத்தை ராசியாகக் கொண்ட இடபராசி அன்பர்கள், எப்போதும் அடுத்தவர்களின் நலனுக்காகவே உழைக்கும் பண்புடையவர்கள். வெள்ளை மனது கொண்ட நீங்கள் எல்லோரையும் நம்புபவர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு இந்தப் பிலவத் தமிழ்ப்புத்தாண்டுப் பலன்கள் எப்படி அமையும் என்பதைப் பார்ப்போம்.

ராசிக்கு 12 இல் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும் ஆண்டாக இந்த ஆண்டு அமையும். வைகாசி மாதம் முதல் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் விட்டுப்போவதன் மூலம் அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் திருப்தி தரும்.

பிள்ளைகள் உங்கள் சொல்பேச்சைக் கேட்பார்கள். அவர்களின் எதிர்காலத்துக்காக சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம், அலட்சியப் போக்கு மாறும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

சகோதர உறவுகளுக்கு உதவுவீர்கள். சொத்துப் பிரச்சினைகள் தீரும். தாய் வழி உறவினர்களிடையே இருந்துவந்த பிரச்னைகள் நீங்கும். உங்கள் மீது மதிப்பும் மரியாதையும் காட்டுவார்கள். குழந்தை இல்லாதவர்களுக்கு மார்கழி, தை மாதங்களில் குழந்தைப் பாக்கியம் உண்டாகும்.

ஆடை, ஆபரணங்கள் சேரும். மதிப்பு மரியாதை கூடும். மனப் போராட்டம் ஓயும். குலதெய்வப் பிரார்த்தனைகள், மன நிறைவு தரும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாழ்வு மனப்பான்மை நீங்கும். உங்கள் மனதை வாட்டிய பிரச்சினை முடிவுக்கு வரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். '

குடும்பத்தில் அமைதியும், நிம்மதியும் ஏற்பட குடும்ப உறுப்பினர்களிடம் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம்.

இந்தாண்டு கணவன் - மனைவி இடையே கருத்து வேறுபாடு, தேவையற்ற பிரச்னைகள், பிரிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

திருமணம் உள்ளிட்ட சுப காரிய முயற்சிகள் வெற்றி தருவதாக இருக்கும்.

வெளிநாடு வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டால் நல்ல லாபம் தரக்கூடியதாக இருக்கும்.

உங்களுக்கு நிதி நிலைமை சிறப்பாக இருக்கும்




என்பதால் அதை சிறப்பாக சேமித்து வைக்க முயல்வது நல்லது

**குரு பகவான் அருளும் பலன்கள்**

14.4.2021 முதல் 13.9.2021 வரை மற்றும் 13.11.2021 முதல் வருடம் முடியும் வரை குரு ராசிக்கு 10இல் நுழைவதால் பணிச்சுமை அதிகரிக்கும்.

தேவையற்ற பழிகள் வந்து சேரும். பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ளக் கடுமையாக உழைக்க வேண்டிவரும். எவரையும் நம்பி எந்தப் பணியையும் ஒப்படைக்க வேண்டாம். திடீர் பயணங்கள், வீண் செலவுகள், காய்ச்சல் ஏற்படலாம்.

ஆனால் 14.9.2021 முதல் 12.11.2021 வரை குரு 9 ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும். பழைய கடன் பிரச்னைக்குத் தீர்வு காண்பீர்கள். வீட்டில் சுபகாரியங்கள் நடந்தேறும்.

**ராகு கேது தரும் பலன்கள்**

20.3.2022 வரை ராசிக்குள் ராகு நிற்பதால் சின்னச் சின்ன உடல் உபாதைகள் அதிகரிக்கும். கேது 7இல் நிற்பதால் குடும்பத்தில் சின்னச் சின்ன குழப்பங்கள் உருவானாலும் அவை நல்லமுறையில் தீரும். பதற்றம், கனவுத்தொல்லை வரக்கூடும். 21.3.2022 முதல் வருடம் முடியும் வரை 12 இல் ராகு நுழைவதால் உடல்நலம் மேம்படும். கேது 6 இல் நுழைவதால் திடீர் பணவரவு, யோகம் உண்டாகும். கடன்பிரச் சினை தீரும். வழக்கு சாதகமாகும். பணம் வரவு அதிகரிக்கும்.

**சனிபகவான் அருளும் பலன்கள்**

9ஆம் வீட்டிலேயே சனி பகவான் தொடர்வதால் தன்னம்பிக்கை துளிர்விடும். வழக்குகள் சாதகமாகும். ஆனால் தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும். அவருடன் மனஸ்தாபங்கள் வெடிக்கும். மாசி, பங்குனி மாதங்களில் அலைச்சல் அதிகரிக்கும். சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும்.

பல வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்கும் நீங்கள், இனி நேரம் கடந்து சாப்பிடுவதைத் தவிர்க்க பாருங்கள்.



**உத்தியோகம் :** எதிர்ப்புகள் விலகும். முழுச் சுதந்திரம் பெறுவீர்கள். பணியில் நிரந்தரமாக்கப்படுவீர்கள். உயர் அதிகாரியின் அடக்கு முறை விலகும். தடைபட்டிருந்த பதவி சம்பள உயர்வு தேடி வரும். வேலைப்பளு குறையும். கணினித் துறையில் பணிபுரிபவர்களுக்கு அயல்நாட்டில் புது வாய்ப்புகள் தேடி வரும். கலைஞர்கள் தொடர்ந்து வெற்றி பெறுவார்கள். எவரையும் தாக்கிப் பேச வேண்டாம். சம்பளம் உயரும். வீண் வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். திறமை வாய்ந்த புதிய கலைஞர்கள் அறிமுகமாவார்கள்.

**இந்த பிலவ ஆண்டு, உங்களுக்கு அனைத்து வசதி, வாய்ப்புகளை அள்ளித் தருவதுடன், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தையும் தரும்.**

## இன்றைய நாள்





**மேடம்:** திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். தைரியம் கூடும். எதிலும் நிதானம் தேவை. பணவரவுக்கு வாய்ப்புள்ளது. படபடப்பு, மறதி காரணமாக ஏற்பட்ட பிரச்னைகள் தீரும்.



**இடபம்:** குடும்பத்தினருடன் ஆலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். கணவன், மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடு தீரும்.



**மிதுனம்:** சொத்து வாங்குவது சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். திருமணத்துக்கு நல்ல இடத்து சம்பந்தம் தேடி வரும். சொத்து சம்பந்தமாக வாரிசுதாரர்களிடையே உடன்பாடு உண்டாகும்.



**கடகம்:** சொந்தங்களின் உதவியுடன் திருமணத்தை சிறப்பாக முடிப்பீர்கள். நின்று போன பெரிய தொகை அசல், வட்டியுடன் இன்று வசூலாகும். உதாசீனம் செய்த உறவுகள் நாடி வருவர்.



**சிம்மம்:** நீண்ட நாளாக மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் குணமடைவர். பேச்சில் கவனம் தேவை. பழிவராமல் காத்துக் கொள்ளுங்கள். பாக்கிய யோகம் உண்டாவதால் வீடு வாங்குவீர்கள்.



**கன்னி:** வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்களுக்கு நற்செய்தி உண்டு. புதிய வீடு க[illegible] விரியும். நல்ல காரணங்களுக்காக இன்று வெளியூர் செல்வீர்கள்.



**துலாம்:** ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். கூட்டுத் தொழில் செய்வோர் அதிலிருந்து விலகி சுயதொழில் தொடங்குவர்.



**விருச்சிகம்:** பணியில் சாதகமான நிலை இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீங்கள் முயற்சி செய்த வேலை சம்பந்தமாக நற்செய்தி வரும். பணியிடத்தில் வெற்றி பெறுவீர்கள்.



**தனுசு:** அலுவலகத்தில் சகபணியாளர்களுடன் விவாதம் செய்ய வேண்டாம். பதவி உயர்வு சம்பந்தமாக மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். உங்களுக்கு வங்கி, அரசாங்கப் பணி கிடைக்கும்



**மகரம்:** விளையாட்டு, .பொலிஸ் துறையில் உள்ளோர் கவுர விக்கப்படுவர். வியாபாரம் சீராக இருக்கும். பணியிடத்தில் மகிழ்ச்சி நிலவும். பணி, தொழில் சம்பந்தமான பயணங்கள் லாபமாக அமையும்.




**கும்பம்:** முன்னேற்றம் உண்டு. பழைய பாக்கி வசூலாகும். உங்கள் மீது யாரும் கோபப்பட முடியாத அளவு நடந்து கொள்வீர்கள். மனக்கவலை குறையும். பணவரவு உண்டு.



**மீனம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வீண்பழி நீங்கும். மனக்குறை குறையும். சில்லறை சண்டைகள் தீரும். கவலை மறையும். ஆர்வமுடன் முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் பதார்த்தம் கலந்த எண்ணெய் விற்பனையில் இல்லை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 12**

**புற்றுநோயை ஏற்படுத்தும் பதார்த்தம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படவில்லை. சேகரிக்கப்பட்ட 109 தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் ஊடாக சுகாதாரத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.**

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்யில் புற்றுநோயை ஏற்படுத்தும் 'அவ்லாரொக்சின்' பதார்த்தம் கலக்கப்பட்டமை இருவேறுபட்ட விஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டன. இந்த தேங்காய் எண்ணெய் கொள்கலன்கள் சுங்கத் திணைக்களத்தால் குறித்த நிறுவனத்தின் களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டன.

'அவ்லாரொக்சின்' பதார்த்தம் கலக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது என எதிர்த்தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள்.

25 மாவட்டங்களிலும் உள்ள பிரதான எண்ணெய் விநியோக மையங்களில் இருந்து 125 தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பெறுக்கொள்ளப்பட்டன. இவற்றில் 109 மாதிரிகளில் அவ்லாரொக்சின் பதார்த்தம் கலக்கப்படவில்லை என்பது பரிசோதனை ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அறிக்கை தேசிய நுகர்வோர் அதிகார சபைக்கும், தெங்கு உற்பத்தி அதிகார சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே பொதுமக்கள் தேங்காய் எண்ணெயை அச்சமின்றி கொள்வனவு செய்யலாம் - என்றார். (த-இ)

# கோழி இறைச்சி: விலை நிர்ணயம்



கொழும்பு, ஏப். 12

ஒரு கிலோ கோழி இறைச்சியின் அதிகபட்ச சில்லறை விலை 600 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, புறக்கோட்டை கோழி இறைச்சி விற்பனையாளர்கள் தமது விற்பனை நடவடிக்கையில் இருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதனையடுத்து கூட்டுறவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சில், கோழி விற்பனையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில், கூட்டுறவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்ததாவது,

புறொய்லர் கோழி இறைச்சி ஒரு கிலோ 430 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு சங்கங்கள் தீர்மானித்தன. இதில் இடைத்தரகர்களுக்கு காணப்பட்ட பிரச்சினையும் தீர்க்கப்பட்டுள்ளது. இடைப்பட்டவர்களுக்கு 375 ரூபாவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக ஒரு கிலோ கோழி இறைச்சிக்கான அதிகபட்ச சில்லறை விலை 600 ரூபா என்று நிர்ணயிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. -என்றார். (ம-4)

# வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள்

கொழும்பு, ஏப். 12

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, நாடு தழுவிய ரீதியில் வர்த்தக நிலையங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்படும் என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் சாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரிசி மற்றும் கோழி இறைச்சி உள்ளிட்ட பல பொருள்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதனடிப்படையில் அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக அபராதம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொருள்களின் தரம் தொடர்பிலும் ஆய்வு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# மேலும் சில உற்பத்திகளை தடைசெய்வதற்குத் திட்டம்

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மேலும் சில உற்பத்திகளைத் தடை செய்வதற்கு சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள உற்பத்திகளின் பட்டியல், சுற்றாடல் அமைச்சுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பரிசீலனை இடம்பெறுகின்றன. சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீனுக்குப் பதிலாக, மாற்று உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். கடந்த முதலாம் திகதி முதல் ஒருமுறை பயன்படுத்தும் பொலித்தீன், பிளாஸ்டிக், காற்றடைக்கப்பட்ட பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்கள், 20 கிராம் மற்றும் 20 மில்லிலீற்றருக்குக் குறைந்த நிறைகொண்ட பொலித்தீன் பைக்கற்றுக்கள் உள்ளிட்டவை தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)





# லங்காகம – நில்வெல்ல பாலம் திறந்துவைப்பு

கொழும்பு, ஏப். 12

இலங்கை கடற்படையினரால் அமைக்கப்பட்ட லங்காகம நில்வெல்ல பாலம் சம்பிரதாயபூர்வமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

தெற்கு மாகாண ஆளுநர் டாக்டர் வில்லி கமகேவின் ஆதரவின் கீழ், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் பங்குபற்றலுடன் பாலம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பாலம் தென் மாகாணத்தில் உள்ள லங்காகம மற்றும் நில்வெல்ல ஆகிய கிராமங்களை இணைக்கிறது.

இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த வருடம் ஜூலை 28 ஆம் திகதி கடற்படையால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஜின் கங்கை வழியாக லங்காகம மற்றும் நில்வெல்லவை இணைக்கும் புதிய பாலம், கிராமவாசிகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் உத்தியோகபூர்வ தேவைகளுக்கான பயணங்களை முன்பை விட எளிதாக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# தலைப்பிறையை தீர்மானிக்க மாநாடு

கொழும்பு, ஏப். 12

ஹிஜ்ரி ஆயிரத்து 442ஆம் ஆண்டுக்கான, புனித ரமழான் மாதத்தின் தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு இன்று திங்கட்கிழமை மஹ்ரிப் தொழுகையின் பின்னர் இடம் பெறும் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினர்கள் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர். (ம-4)

# உருக்குலைந்த சடலம் மீட்பு

அம்பாறை மாவடிப்பள்ளி பகுதியில் கால்வாய் ஒன்றில் உருக்குலைந்த நிலையில், ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

பொதுமக்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சடலம் மீட்கப்பட்டது. சடலம் அடையாளம் காணப்படவில்லை. சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

# வர்த்தக நிலையத்தில் தீ பரவல்



கொழும்பு, ஏப்.12

ஜா-எல பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில், நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயணைப்புப் பிரிவினர், தீ பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தீ விபத்துக்கான காரணங்கள் மற்றும் சேத விபரங்கள் வெளியிடப்படவில்லை. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய மாணவர் இயக்கத்தை அரசு தடைசெய்திருப்பது அநியாயம்

## அந்த இயக்கத்தின் பதில் தலைவர் கண்டனம்

**கொழும்பு, ஏப்.12**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் எவ்வித அடிப்படைகளோ எத்தகைய ஆதாரங்களோ இன்றி எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும், எமது இயக்கத்தைத் தடை செய்வதற்கு சட்டமா அதிபர் அங்கீகாரம் அளித்துள்ளதையும் நாம் முற்றாக நிராகரிக்கிறோம் என்று ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் பதில் தலைவர் எம்.ஏ. அம்ஜத் கான் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு எவ்வித நியாயமான ஆதாரங் களுமின்றி எமது இயக்கத்தை ஒரு தீவிரவாத இயக்கமென அடையா ளப்படுத்தி இருப்பதையிட்டு நாம் விசனமடைகிறோம்.

எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்க நாம் ஒரு தடவையேனும் அழைக்கப்பட வில்லை. இது உலகெங்கும் ஏற் றுக்கொள்ளப்பட்ட இயற்கை நீதி யின் நியமங் களுக்கு முரணான தாகும். பிரதான நீரோட்டத்தில் நின்று வெளிப்படையாக இயங் கிய, மாசற்ற வரலாற்றைக் கொண்ட இளைஞர் இயக்கம் என்ற வகையில் எமது இயக்கத் தைத் தடைசெய்ய எதேச்சாதிகார மாக அங்கீகாரமளிக்கப்பட்டிருப்ப தையிட்டு நாம் அதிர்ச்சியும் வேத னையும் அடைகிறோம்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடனோ அல்லது வேறு எந்த பயங்கரவாதச் சம்ப வங்களுடனோ எமது அமைப்புக்கு சிறு அளவிலான சம்பந்தமும் கிடையாது.

ஏன் விசாரணை ஆணைக்குழுவோ அல்லது சட்டமா அதிபரோ எம்மை அழைத்து விசாரித்திருக்கக் கூடாது? எமது அமைப்பிலிருந்து ஏற்கனவே விலக்கப்பட்ட சிலர் மாவனல்ல புத்தர் சிலை தாக்குதல் விவகாரத்தில் கைது செய்யப்பட்டி ருக்கின்றமைதான் எமது இயக்கத் தின் மீதான தடைக்கு ஒரே கார ணம் என எமக்குத் தோன்றுகிறது.

பொறுப்பற்ற சிலரால் மேற்கொள் ளப்பட்ட இந்த இழிச்செயலையும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்கு தலையும் நாம் ஏற்கனவே வன் மையாகக் கண்டித்திருக்கிறோம்.

இத்தகைய சிலர் பல வருடங்க ளுக்கு முன்னரே எமது அமைப்பி லிருந்து வெளியேற்றப்பட்டமை பிழையான போக்கு ஒன்றை எமது இயக்கம் கிஞ்சித்து சகித்துக்கொள்ள மாட்டாது என்பதற்கான சிறந்த சான்றாகும் - என்றுள்ளது. (ப)

# கருத்து சுதந்திரம் சபையிலும் இல்லையா?

## சாணக்கியன் எம்.பி. சீற்றம்



கொழும்பு, ஏப். 12

நாடாளுமன்றத்திலும் கருத் துச் சுதந்திரத்துக்கு அச்சுறுத் தல் விடுக்கும் கோத்தா அர சின் உறுப்பினர்கள் தொடர் பில் சபாநாயகர் கடுமை யான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றில் நான் ஆற்றிய உரை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மறு நாள் கருத்துத் தெரிவித்திருந்தார். எனது உரையை அடிப்படையாகக்கொண்டு குற்றப் புலனாய்வுப் பிரி வினர் உடனடியாக விசாரணை நடத்தவேண்டும் என்று அவர் உரையாற்றியிருந்தார்.

மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் இந்தச் சபை யில் எனது கருத்துச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. இதனை அனுமதிக்க முடியாது. எனது வாயை மூடுவதற்கு அவர் முயற்சிக்கின்றார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சபாநாயகரைக் கோருகின்றேன் - என்றார்.

இதேவேளை 'சபையில் தெரிவிக்கப்படும் கருத்துத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கமுடியாது.

தெரிவித்த கருத்துக்கள் தவறானவை என்றால் குற் றப்பிரேரணை கொண்டு வந்து விவாதம் நடத்தலாம்' என்று எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஆளும்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இதற்குப் பதிலளித்தார். 'ஈஸ்டர் தாக்கு தல் போன்று இன்னொரு தாக்குதலுக்கு அரசு திட்டமி டுகின்றது' என்று இன்னொரு அவர் குற்றம் சுமத்தியிருந்தார். நாடாளுமன்றில் பேசும்போது உண்மையானதைப் பேசவேண்டும்' என்றார் ஜோன்ஸ்டன். (ஒ.இ)

# ரஞ்சனின் குடியுரிமையும் பறிபோகப் போகின்றது

## எதிர்க்கட்சியினர் தெரிவிப்பு

எதிர்வரும் ஜூலை மாதத்துடன் ரஞ் சன் ராமநாயக்கவின் குடியுரிமையும் இரத்தாகிவிடும். அதன் பின்னர் அவர் தேர்தல்களிலும் போட்டியிட முடியாத நிலைமை ஏற்படும். அவ ரின் குரலை முடக்கவே அரசு முயற் சிக்கின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலை வர் அலுவலகத்தில் நேற்றுமுன் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் எவ்வித அறிவிப்புமின்றி சபைக்கு 3 மாதங் கள் தொடர்ச்சியாக வராவிட்டால் அவரது உறுப்புரிமை இரத்தாகும். இதனால்தான் ரஞ்சனுக்கு 3 மாதங் கள் விடுமுறை வழங்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை விடுத்திருந்தார். சபாநாயகர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 3 மாதங் கள் முடிந்தவுடன் ரஞ்சனின் நாடாளு மன்ற உறுப்புரிமையை பறித்திருக் கின்றார்கள்.

ஒருவர் 2 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டு 6 மாதங்கள் அந்தத் தண்ட னையை அனுபவித்தால் அவரின் குடி யுரிமை இரத்தாகிவிடும். ரஞ்சனுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எதிர்வரும் ஜூலை மாதத்துடன் அவரது குடியுரிமையும் பறிபோய்விடும். அதன் பின்னர் அவர் ஜனாதிபதியால் மன்னிப்பளித்து விடுவிக்கப்பட்டாலும் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலைமையே காணப்படும்- என்றார். (ஒ.இ)



# அரசின் இயலாமையை மறைக்க நௌபர் மௌலவி பலிக்கடா!!!

## சரத் பொன்சேகாவும் சாட்டை

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரியை அர சால் இனங்காண முடியாமல் போயுள்ளது. அதனை மறைப்பதற்கு ஏற்கனவே கைதா கிச் சிறையிலுள்ள நௌபர் மௌலவியை சூத்திரதாரி என்று அரசு அடையாளப்படுத் துகின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எதிர்க்கட்சிகள் மீது பழி சுமத்தப்படுகின்றது. அரசு தனது இயலாமையை மூடி மறைக்க முயல்கின்றது. நௌபர் மௌலவி ஏற்கனவே கைதாகி சிறை வைக்கப்பட்டிருந்தவர். அவர் ஒரு போதும் சஹ்ரானின் தலைவராகச் செயற் படவில்லை. அவர் இந்தத் தாக்குதலை ஒழுங்கமைத்தார் என்பதற்கும் எந்தவொரு சாட்சியங்களும் இல்லை. இவ்வாறானதொரு நிலையில் உண்மைச் சூத்திரதாரிகளைக் கண்ட றிய முடியாமல் தனது இயலா மையை மூடிமறைக்க நௌபர் மௌல வியை இந்த விடயத்தில் அரசு தொடர்பு டுத்தியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ராஜபக்ச அரசு ஆட்சியிலிருந்த 2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் அவர்க ளுக்கு சஹ்ரானுடன் தொடர்பிருந்தது. அது தொடர்பில் ஆராயப்படவேண்டும்- என்றார். (ஒ-இ)

# கோத்தாபய அரசுக்கு எல்லாம் 'பெயில்'

## அஜித் மன்னப்பெரும கன்னியுரையில் காட்டம்

கொழும்பு, ஏப். 12

மக்களுக்கு வாக்குறுதியளித்த எந்த வொரு விடயங்களையும் அரசு நிறை வேற்றவில்லை. மக்களை வாழ முடி யாத நிலைமைக்கே இந்த அரசு தள்ளிச் செல்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தனது கன்னி யுரையில் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை வெற்றிடத்துக்கு நியமிக் கப்பட்ட அஜித் மன்னப்பெரும, நேற்று முன்தினம் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தார். தனது கன்னியுரையை அதன் பின்னர் நிகழ்த்தி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை இரண்டு ஆண்டுகளாகியும் கண்டறிய முடியவில்லை. தாக்குதலில் பாதிக்கப் பட்டோருக்கு அரசால் நீதியைப் பெற்றுக் கொடுக்கமுடியவில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி தேசிய வளங்களைப் பாதுகாப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்களால், தேசிய வளங்கள் சூறையாடப்படுகின் றன. அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக எதுவும் செய்ய முடியாத கையறு நிலையில் அதிகாரிகள் உள்ளனர். அர சின் இந்தப் போக்குக்கு எதிராகக் குரல் கொடுத்தால் அவர்கள் அச்சுறுத்தப்படு கின்றனர்.

மக்களுக்கு தேசியப் பாதுகாப்புத் தொடர் பில் சிந்திப்பதற்கு முடிவதில்லை. அவர் கள் வாழ்வதற்கு, உணவருந்த என்ன செய்வதென்றே சிந்திக்கின் றார்கள். வாழ்க்கைச் செலவு மலை போல அதிகரித்திருக்கின்றது. மக்க ளுக்கு நிவாரணம் இல்லை. அவர்கள் எப்படி வாழ்க்கையை நடத்துவது என்று தான் சிந்திக்கின்றார்கள்.

புத்தாண்டு காலத்தில் சந்தைக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மக்களுக்கு அச்சமாக இருக்கின்றது. எந்தப் பொருளில் புற்று நோய்ப் பதார்த்தம் கலந்துள்ளது என் பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலைமை இருக்கின்றது - என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காலநடைகளின் உறைவிடமானது மாங்குளம் பஸ் நிலையம்

## வீதியில்லாததால் இந்த நிலை

**முல்லைத்தீவு, ஏப்.12**

**வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் வீதி அமைத்து வழங்கப்படாததன் காரண மாக மாங்குளம் பஸ் நிலையம் கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது;

கடந்த 2019 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் குறித்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. ஏ-9 வீதியில் இருந்து பஸ் நிலையம் கடந்து ரயில் நிலையத்துக்கு அருகில் துணுக்காய் வீதியைச் சந்திக்கின்ற 400 மீற்றர் தூர வீதி இதுவரை அமைக்கப்படவில்லை. தொடக்கத்தில் ரயில் திணைக்களத்தினர் தங்களுடைய காணிக்குள் வீதி வருகின்றது எனத் தெரிவித்த நிலையில் வீதி வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வீதி அமைப்பதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக வினவியிருந்தார். இதற்கு இப்பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து வீதி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் மாங்குளம் பஸ் நிலையத்துக்கான வீதி இதுவரை அமைக்கப்படவில்லை.

இதன் காரணமாக மாங்குளம் நகரத்தில் பஸ்கள் தங்கிச் செல்கின்ற



போதும் ஒரு பஸ்கூட மாங்குளம் பஸ் நிலையத்துக்குச் செல்வதில்லை. வீதி அமைக்கப்பட்டால் தான் மாங்குளம் செல்கின்ற பஸ்கள், பஸ் நிலையத்துக்குச் செல்ல முடியும். தற்போது புதிய பஸ் நிலையம் கால்நடைகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-19-13)

# நெற் காணியில் நீர்வரத்து அதிகம்; பெண் தலைமைக் குடும்பம் பாதிப்பு



வவுனியா மாதர் பனிக்கங்குளம் பகுதியில் 17 ஏக்கரில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது, குறித்த காணியில் தேவைக்கு அதிகமாக நீர்வரத்து காணப்படுவதால் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாதர் பனிக்கங்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட த.நாகேஸ்வரி என்ற குடும்பப் பெண்ணினது விவசாயக் காணியிலேயே இவ்வாறு நீர்வரத்து காணப்படுகிறது.

இது தொடர்பில் அந்தப் பெண் கருத்துத் தெரிவித்ததாவது;

வேதக்கல் குளத்தில் அணைக்கட்டு கட்டப்பட்டு மூன்று போகத்துக்கு அதிகமான நீரைத் தேக்கிய காரணத்தால் குளத்தின் பின்பகுதியில் மேலதிகமாக தேங்கும் நீரால் எனது விவசாய நிலம் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. நீரின் அதிக வரத்துக் காரணமாக இம்முறை எனது நெற் செய்கையில் ஐந்து ஏக்கர் பயிர்ச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது.

அரச அதிகாரிகள் இப் பிரச்சினையில் தலையிட்டு எனக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். வேதக்கல் குளக்கட்டானது சின்னக்கிழவிக்குளம், பெரியகிழவிக்குளம், பாலமோட்டை மற்றும் பனிச்சங்குளம் ஆகிய நான்கு குளங்களுக்கு வேதக்கல் குளத்திலிருந்து நீர் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே நிறுவப்பட்டது. ஆனால், குறித்த நான்கு குளங்களுக்கும் நீர் வழங்கப்படுவதில்லை. இதனால் எனது விவசாயக் காணிக்குள் தேங்கும் நீர், பெரும்போகம் மற்றும் சிறுபோகத்தை அழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது -என்றார். (ஐ-110)



தேசிய சேமிப்பு வங்கியின் 31ஆவது வருட நிறைவு நிகழ்வு நாட்டில் உள்ள அனைத்து கிளைகளிலும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சாவகச்சேரி கிளையில் முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினராக வங்கிக்கிளையின் முன்னாள் முகாமையாளர் க.இராசதுரை கலந்துகொண்டார். (ஐ-9)



# 120 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஏப்.12

'வன்னியின் கண்ணீர்' அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளியவளை பூதன் வயல் கிராமத்தில் பொருளாதாரம் நலிவடைந்த 120 குடும்பங்களுக்கு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மருத்துவர் விக்னராசாவால் அவரது மனைவியின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-19)

# இரண்டாம் தடுப்பூசி செலுத்தலை நிபுணர் குழுதான் தீர்மானிக்கும்

அஸ்ட்ராஜெனகா இரண்டாம் கட்ட தடுப்பூசியை எந்தக் காலப்பகுதியில் செலுத்துவது என்ற தீர்மானத்தை நிபுணர் குழு இன்று கூடி ஆராயும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னதாக இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றத்தை 10 வாரங்களில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது உலகளாவிய ரீதியில் உள்ள நடைமுறைகள் குறித்து ஆய்வு செய்யப்படுகின்றது. இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்துவதற்காக 2 லட்சத்து 30 ஆயிரம் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. அத்துடன் இந்த மாத இறுதியில் மேலும் ஒரு தொகை அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ம4)

# பண்டிகைக் காலத்தில் மிகவும் அவதானம் தேவை

**சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை**

கொழும்பு, ஏப்.12

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தினர் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் புதிய வகை கொரோனா வைரஸ் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே அடுத்த அலையொன்று தோற்றம் பெறாத வகையில் மக்கள் அவதானத்துடன் செயற்படுவது பொதுமக்களின் பொறுப்பாகும். பண்டிகைக் காலத்தில் வணிக நடவடிக்கையில் ஈடுபடும் போது, உடல்நலம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மிகவும் அவசியம். கொவிட்19 நிலைமை மோசமடைந்து விட்டால் அது நாட்டை மேலும் தனிமைப்படுத்தி, பொருளாதார ரீதியான பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும். எனவே நெரிசலான இடங்களுக்குச் செல்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். -என்றார். (ப-4)

# 14 ஏக்கர் விவசாய நிலத்துக்கு குளத்து நீர் கிடைப்பதில்லை

## விவசாயிகள் பாதிப்பு



முல்லைத்தீவு, ஏப்.12

சுதந்திரபுரம் பகுதியில் 14 ஏக்கர் விவசாய நிலம் உடையார்கட்டுக்குளத்தின் கீழ் உள்வாங்கப்படாமை காரணமாக சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு சுதந்திரபுரம் பகுதியில் 7 குடும்பங்களுக்கு சொந்தமான 14 ஏக்கர் விவசாய நிலத்துக்கே தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது

கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 14 ஏக்கர் விவசாய நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும், சிறுபோக நெற்செய்கைக்கு உடையார்கட்டுக் குளத்தின் கீழ் குறித்த வயல் காணிகள் உள்வாங்கப்படாமையால் வயல்களுக்கு குளத்து நீர் கிடைப்பதில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உடையார்கட்டுக்குளத்தின் நீர்ப்பாசன பொறியிலாளரை தொடர்புகொண்டு கேட்டபோது உடையார்கட்டுக் குளத்தின் கீழ் ஆயிரத்து 280 ஏக்கருக்கு சிறுபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. பதிவில் இல்லாத காணிகளுக்கு நீரை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பதிவு செய்வதாயின் அவர்கள் மாவட்டச் செயலரிடம் விண்ணப்பிக்க வேண்டும். - என்றார். (ஐ-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உசன் கந்தசுவாமி கோவிலில் நாளை விசேட வழிபாடுகள்

சாவகச்சேரி, ஏப்.12

தென்மராட்சி உசன் கந்தசுவாமி கோவிலில் நாளை செவ்வாய்க்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இலங்கை மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொவிட் 19 வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய்களிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை காலை 6.30 மணிக்கு இந்த வழிபாடு நடைபெறும். விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் கோவில் பிரதம குருக்கள் அருள்வாக்கு சித்தர் சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்கள் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு இது நேரடி ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது. (ம-த)

# பயணிகளின்றி வெறிச்சோடிய பஸ்களே பயணிக்கின்றன

வவுனியா, ஏப். 12

வவுனியா மத்திய பஸ் நிலையத்திலிருந்து உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கு தினசரி 40க்கும் மேற்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், கொரோனா அச்சம் காரணமாக பயணிகளின் எண்ணிக்கை குறைந்தளவில் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா அச்சத்தால் மக்கள் தற்போது சொந்த வாகனங்கள் மற்றும் வாடகை வாகனங்களில் அதிகளவில் பிரயாணம் மேற்கொள்கின்றனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்திலும் குறைந்தளவு பயணிகளுடனேயே பஸ்கள் பயணிக்கின்றன என்று பஸ் உரிமையாளர்கள் கூறுகின்றனர். உள்ளூர் பஸ் சேவையில் பயணிகளின் எண்ணிக்கை கணிசமானளவு காணப்படுகின்றபோதிலும் வெளிமாவட்டங்களுக்கான பஸ்கள் குறைந்தளவு பயணிகளுடனேயே தமது சேவையைத் தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-18)

# பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் ரீட்சை - 2021**

1) வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம் III
பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

2) வடக்கு மாகாண பொதுச்சேவையின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III
பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2021

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.05.07 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி.திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**12.04.2021**

வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகளுக்காக மதிப்பீட்டாளர்களுக்கான

## விண்ணப்பங்கள் கோரல்

வட இலங்கைச் சங்கீத சபையின் தரம் 1 - 6 வரையான பரீட்சைகளுக்கான பரீட்சை மதிப்பீட்டாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடங்கள்**
வாய்ப்பாட்டு / வீணை / வயலின் / மிருதங்கம் / புல்லாங்குழல் / ஹார்மோனியம் / நடனம் / நாடகமும் அரங்கியலும் / தவில் / நாதஸ்வரம்.

**தகைமைகள்**
1. பாடங்களில் பட்டதாரித் தகைமை / கலாவித்தகர் தகைமை / டிப்ளோமா தகுதி / பயிற்றப்பட்ட ஆசிரியர்

* பரீட்சகராகக் கடமையாற்றிய அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்

விண்ணப்பிப்பவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன் தமது கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவச் சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி : 05.05.2021**
**அனுப்பவேண்டிய முகவரி : தலைவர்,**
**வட இலங்கை சங்கீத சபை,**
**மருமதனார்மடம், சுன்னாகம்.**
**தொலைபேசி இலக்கம் : 021 224 2319**
Email. jaffnancoms@gmail.com

**திரு.பொ.ரவிச்சந்திரன்**
**தலைவர்,**
**வட இலங்கைச் சங்கீத சபை**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 09 கண்டி வீதி 644/1 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் துரைச்சாமி பெண் அன்னபூரணம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமும் உள்ளடங்குகின்ற நில.பர (1 1/2) விஸ்தீரணமான ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 1273ஆம் இலக்க 2005 ஆவணி 25ஆம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் பொன்னம்பலம் வீதி அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி துரைச்சாமி கமலாம்பிகை என்பவர் நெடுங்குளம் றோட் கொழும்புத்துறையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமாருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். குறித்த 1273ஆம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரம் குறிப்பிடப்படாது தனது பிதாவழி முதுசமும் நாற்பது (40) வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட கால தடையற்ற ஆட்சியில் இருந்த ஆதனமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆத்தக்காட்டு வளவு" நில.பர 4 / இதில் கிழக்குப்பக்கமாக சீதனமளிக்கப்பட்ட நில.பர 3ஜ தவிர்ந்த மீதி நில.பர ஒன்றரை (1 ½) யும் செய்பயிர் வான்பயிர்களும்.

**எல்லை**
கிழக்கு :- சிவக்கொழுந்து துரைச்சாமி மகேஸ்வரியினது ஆதனம்
வடக்கு :- றோட்டு.
மேற்கு :- துரைச்சாமி பெண் அன்னபூரணத்தின் உரித்தாளரினது ஆதனம்.
தெற்கு :- வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தினுரிமைக்காரரினாதனம். இதடங்கலும்.

தற்போது கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யார் வது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணகுமார் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
யாழ். நல்லூரில் இயங்கும்
லிங்கா பெஷன் இன்
மாபெரும் தள்ளுபடி
சேலை வகைகளுக்கு
50% விசேட கழிவுகள்
இரண்டு சேலை வாங்கினால் ஒன்று இலவசம்
மேலும் பல ஆடைகளுக்கான விசேட தள்ளுபடி

இல. 302A, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
Tele No : 021221 4999 www.Lingaa.lk
WhatsApp : 076 644 0722 www.Fb.com/Lingaa.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் விசேட சோதனை

கொழும்பு, ஏப். 12
நாட்டில் கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாதோர் தொடர்பில் பொலிஸார் நேற்று முதல் விசேட சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது செயற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், விசேட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ம-4)

# அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதியில் பாலம் வேண்டும்

## பிரதேச மக்கள் கோரிக்கை



**கிளிநொச்சி, ஏப். 12**
**முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் வான்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாலம் போன்று அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதியில் பாலம் அமையுங்கள் என்று அம்பலப்பெருமாள்குளம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

துணுக்காய், அக்கராயன் வீதியில் அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதி ஊடாக போக்கு வரத்துகள் நடைபெறுகின்றன. சேதமடைகின்ற வான்பகுதியை நீர்ப்பாசனத் திணைக்களம் சீரமைத்தாலும் நெல் மூடைகளுடனான வாகனங்கள் மற்றும் மணல் மற்றும் கிரவல் டிப்பர்கள் உட்பட கனரக வாகனங்கள் அவ் வான் பகுதி வழியாக பயணிக்கின்றமையால் குளத்தின் வான்பகுதி தொடர்ச்சியாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

பெரும் மழையின்போது வான் பகுதி உடைப்பெடுக்கக் கூடிய அபாய நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயிகளும் இணைந்து கற்கள் மற்றும் மண் மூடைகள் அடுக்கி வான்பகுதியைப் பாதுகாப்பர். இதற்கு முதலாவது தெரிவு வான்பகுதியில் வவுனிக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ளதுபோல் பாலம் அமைக்கப்பட வேண்டும். இதற்கு 125 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது தெரிவு வான்பகுதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் புதிய பாலம் ஒன்றை அமைத்தல் மூலம் துணுக்காய் பகுதியிலிருந்து இருந்து அக்கராயன் பகுதிக்கான போக்குவரத்துகளை இலகுபடுத்தலாம். தற்போது அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களம் தொடர்ச்சியாக புனரமைப்புகளை மேற்கொண்டாலும் தொடர் போக்குவரத் தாலும் வான்பகுதி சேதமடைந்து வருகின்றது.

தற்போது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் துணுக்காயிலிருந்து அக்கராயன் பகுதி வரையான வீதி புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் அம்பலப்பெருமாள் குளத்தின் வான்பகுதியில் புதிய பாலம் அல்லது வான்பகுதியில் இருந்து 100 மீற்றரில் புதிய பாலம் அமைக்க வேண்டும் என்று அம்பலப்பெருமாள்குளம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (து-13)

# கேள்வி அறிவித்தல்

## கூட்டிணைந்த சமூகப்பொறுப்பு வேலைத்திட்டம்

### விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழுங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடக்கு மாகாணம்.

1. தலைவர் பெறுகைக்குழு விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபி விருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை ( Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம், 655, நாவலர் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-221-7305, தொலை நகல் இலக்கம் 021-221-7304 ) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர் பெறுகைக்குழு விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம், 655, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலிருந்து 2021.04.12 ஆம் திகதியிலிருந்து 2021.05.03 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம், 655, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 2021.05.04 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
9. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2021.04.27. ஆம் திகதி 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | பிணை வைப்பு | பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| NP/31/02/F04/CSR–03/2021 | சேமக்காலைக் குறுக்கு வீதி | 3.430 | 90 நாட்கள் | C8 & C7 | 55,000.00 | 02.08.2021 | 05.07.2021 | 2000.00 |
| NP/31/02/F04/CSR–04/2021 | தர்மக்கேணி வீதி | 6.340 | 90 நாட்கள் | C7 & C6 | 100,000.00 | 16.08.2021 | 19.07.2021 | 2000.00 |
| NP/31/02/F04/CSR–05/2021 | செல்வபுரம் வீட்டுத் திட்ட வீதி | 4.513 | 90 நாட்கள் | C8 & C7 | 70000.00 | 02.08.2021 | 05.07.2021 | 2000.00 |
| NP/31/02/F06/CSR–03/2021 | ஊர்வணிகன்பற்று முத்துமாரி அம்மன் வீதி | 7.526 | 90 நாட்கள் | C7 & C6 | 100,000.00 | 16.08.2021 | 19.07.2021 | 2000.00 |
| NP/31/02/F06/CSR–03/2021 | வளரும் மரத்துகான பாதுகாப்ப வேலி | 0.623 | 40 நாட்கள் | C9& C8 | 10,000.00 | 19.07.2021 | 21.06.2021 | 1000.00 |

தலைவர்
அமைச்சு பெறுகைக்குழு
விவசாய அமைச்சு வடக்கு மாகாணம்
12.04.2021

# ஞானதுர்க்கை அம்மன் திருவுருவச்சிலை திறப்பு

கொடிகாமம், ஏப். 12
மிருசுவில் பகுதியில் அமைந்துள்ள படித்த மகளிர் திட்டம் சிறீஞானதுர்க்கை அம்மன் திருவுருவச்சிலை திறப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு கோவில் தர்மகர்த்தா சிவத்திரு சின்னத்தம்பி நவரத்தினம் ஐயா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 2ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ப.செந்தில்நந்தனன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிரிசிங்க, 52ஆவது படையணியின் இராணுவ உயரதிகாரி பிரிகேடியர் பீரிஸ், எழுதுமட்டுவாழ் வடக்கு கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (கு-159)

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய் சில்லறையாக பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

தேங்காய்எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை, கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3Kg முதல் 3000Kg வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.

பாலன்மில்

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. 021 321 2624

## உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் ஆண்டுப்பொதுக்கூட்டம் - 2021

- இடம் : உடுவில் இந்து இளைஞர் மன்ற கட்டடம் (யா/உடுவில் மான்ஸ் ம.வி. (அருகில்)
- காலம் : எதிர்வரும் (17.04.2021) சனிக்கிழமை
- நேரம் : பி.ப. 5.00 மணி
- விடயம் : யாப்பு அங்கீகாரம்
  புதிய நிர்வாக தெரிவு

மேற்படி கூட்டத்திற்கு பழைய, புதிய அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் (தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்)

செயலாளர்,
உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆளும் அரசால் கொடுமையான இனஅழிப்பு

## நினைவுபடுத்துகின்றது ஈழத்தமிழர் மக்கள் அவை

**கொழும்பு, ஏப். 12**

**இலங்கையை இன்று ஆளும் அரசு, மனிதவுரிமைகளுக்கு மதிப்பளிக்காது கொடுமையான இனஅழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது மஹிந்த ராஜபக்ச, மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் ; ஆட்சியில் இருக்கும் போது, முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் மீது நடந்தேற்றிய கொடுமைகள் கொஞ்சமல்ல இவ்வாறு ஜேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இன்று ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் இனஅழிப்பு அரசிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, தமது பிறந்த நாட்டை விட்டு, உறவுகளைப் பிரிந்து, தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்தனர் எமது உறவுகள். அவர்கள் ஜேர்மன் அரசிடம் அகதி நிலை வாழ்விடக் கோரிக்கையை முன்வைத்துக் காத்திருந்தனர். அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக கூறி, அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

ஜேர்மன் அரசின் இந்த நடவடிக்கையானது எமக்கு பெரும் ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் தந்திருக்கின்றது.

இலங்கையில் ஒரு இனத்தையே அழிக்கும் முழுச் செயற்பாடுகளையும் திட்டமிட்டு அரங்கேற்றினர். வெள்ளைக் கொடியோடு சரணடைந்த மக்களையும், போராளிகளையும் சர்வதேச நீதிநெறிகளை உடைத்தெறிந்து சுட்டுக் கொன்றனர். பெண்கள், குழந்தைகள் என்ற பேதம் இன்றி நிர்வாணப்படுத்தியும், வன்புணர்வு செய்தும் தமிழினத்தின் மீது உச்சக்கட்ட கொடூரங்களை நிகழ்த்தினர்.

அத்தோடு இந்தக் கொடுமையான ஆட்சி ஓய்ந்து விடவில்லை. இன்று 12 ஆண்டுகள் கடந்தும், தமிழர்களின் மீது அடக்குமுறைகளை ஏவி விட்டு மனித உரிமைகளைச் சாகடிக்கும் வகையில் திட்டமிட்ட இராணுவ ஆட்சியை நிலைநாட்டி வருகின்றனர் இன்றைய ஆட்சியாளர்கள்.

அதனால் இராணுவ மற்றும் புலனாய்வாளர்களின் முழுநேரக் கண்காணிப்பில் தமிழர் பிரதேசங்களை வைத்திருக்கின்றனர். இதன் முடிவு இப்போதும் வலிந்து காணாமல் ஆக்கப்படல், திடீர் மரணங்கள், கைதுகள், அரசியல் பழிவாங்கல்கள் என்றும் ஊடக சுதந்திரத்தைப் பறித்து ஊடகவியலாளர்களைக் கைது செய்தல் என தொடர்கதையாகவே தொடர்கின்றன. இதற்கு அரசியல்வாதிகளும் விதிவிலக்கல்ல. இந்த நிலையில் அகதி தஞ்சம் கோரி வந்த எமது ஈழத் தமிழ் உறவுகளை ஜேர்மன் அரசு நாடுகடத்தி இன அழிப்பு அரசிடம் ஒப்படைத்துள்ளது. இவ்வாறு அனுப்பப்பட்ட உறவுகளின் நிலை என்ன ஆகும் என்பது எமக்கு ஏக்கமாகவே இருக்கின்றது என்றுள்ளது. (ம-4)

## உற்பத்தி நாடுகளிடமிருந்து நேரடியாக எரிபொருள்கள்

கொழும்பு, ஏப். 12

சலுகை விலையின் அடிப்படையில், சில உற்பத்தி நாடுகளிடம் இருந்து நேரடியாக எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அதற்கமைவாக சவூதி அரேபியா, கட்டார், குவைத், ஓமான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 270 நாள்களுக்கான கடன் திட்டத்தின் கீழ், எரிபொருள்கள் உற்பத்தி நாடுகளின் பிரதான நிறுவனங்களின் ஊடாக, கொள்வனவு செய்வதற்கும், இந்தத் திட்டத்தால் இலங்கை பொருளாதாரத்துக்கு நன்மை ஏற்படுத்துமா என்பது தொடர்பிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆராய்ந்து வருகின்றது.

எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில், சலுகை விலையில் எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

## இங்கிலாந்து இளவரசர் பிலிப்பின் இறுதிச்சடங்கு சனிக்கிழமை !



லண்டன், ஏப். 12

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும் இளவரசருமான பிலிப் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்த நிலையில், எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை இறுதிச் சடங்குகள் இடம்பெறும் என்று பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவரும் இளவரசருமான பிலிப், தனது 99ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். இவர் இங்கிலாந்து அரச குடும்ப வரலாற்றில் இளவரசராக நெடுங்காலம் சேவையாற்றியவர். இளவரசர் பிலிப்பின் மரணத்துக்கு உலகெங்கிலும் உள்ள மன்னர்கள், அரச தலைவர்கள் முன்னாள் மற்றும் இந்நாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் என பல தரப்பினரும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மறைந்த இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கு தொடர்பான நிகழ்வுகளுக்கான அறிவிப்பை அவரது மனைவியும் இங்கிலாந்து ராணியுமான இரண்டாம் எலிசபெத் வெளியிட்டுள்ளார். ஏப்ரல் 17ஆம் திகதி மறைந்த இளவரசர் பிலிப்பின் இறுதிச்சடங்கு நடைபெறும்.

இந்த இறுதிச்சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் நேரலையாக தொலைக்காட்சியில் ஒளிபரப்படும். மேலும் 17ஆம் திகதி மாலை 3 மணிக்கு இங்கிலாந்து முழுவதும் ஒரு நிமிட மவுன அஞ்சலிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இறுதிச்சடங்கு நிகழ்வில் பங்கேற்கும் அனைவரும் முகக்கவசம் அணிந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே இறுதிச்சடங்கில் பங்கேற்க உள்ளனர். (ம)



## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்

யகார்தா, ஏப். 12

இந்தோனேசியாவில் நேற்றுமுன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 8 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது. குறைந்தது 10 பேர் இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

நெருப்பு வளையம் என்று அடையாளப்படுத்தப்படும் இடத்தில் இந்தோனேசியா அமைந்துள்ளது. இந்த நிலையில் இந்தோனேசியாவின் கிழக்கு ஜகார்தா பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 8 அலகாக நிலநடுக்கம் பதிவானது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி சுமார் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கருதப்படுகின்றது. மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்

திருமதி புனிதவதி சந்திரசேகரம்

என் தாரமாக வந்து
என் தாயாக என்னை
உன் சேயாக, என்னை
உன் கண்ணாக வளர்த்தவளே!
இன்று எம் ஈரவிழிகளுடன்
மூன்றாண்டு கழிந்ததம்மா!
எங்கள் உயிராய் உணர்வாய்
எங்கள் இதயத்தின் நிறைவாய்
வாழ்ந்த எம் ஆத்மாவே!
நாம் காணுமிடம் எல்லாம்
உன் புன்முறுவல் பூத்தமுகம்!
எம்மால் நம்ப முடியவில்லை
நீ மூன்றாண்டுகள்
- எம்முடன் இல்லை என்று
நீங்காத நினைவாய்
நிதம் உனை நினைந்து
எம் கண்ணீர்ப்பூக்களை சொரிகின்றோம்
ஆண்டு பல சென்றாலும்
எமை விட்டு உன் நினைவு நீங்காது!
அன்பே! இமைப் பொழுதும் என்
நெஞ்சில் நீங்காது உன் நினைவு!
உன் மோகனப் புன்னகையை உனக்கு
மோனலிசா வாடகைக்கு தந்தவளா?
நீ சேயாக வளர்த்த உன் கணவனும்
பாசமுடன் வளர்த்த உன் உறவுகளும்



ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் கணவர் சந்திரசேகரம் மற்றும் பாசமுள்ள உறவுகளும்



மண்ணில் மலர்ந்து 19.11.1939
விண்ணில் கலந்து 17.03.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழமைக்குத் திரும்பியது திருநெல்வேலிச் சந்தை



யாழ்ப்பாணம், ஏப்.12

கடந்த இரு வாரங்களாக மூடப்பட்டிருந்த திருநெல்வேலி பொதுச் சந்தைத் தொகுதி மற்றும் கடைகள் நேற்று மீளத் திறக்கப்பட்டன.

பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொண்ட வர்த்தகர்களே வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட 55 வர்த்தகர்கள் நேற்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியிலும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, சந்தைத் தொகுதியும், அந்தப் பகுதி வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. வியாபாரிகள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று சுகாதாரப் பிரிவினர் தற்போது அறிவித்துள்ளனர். (எ-20)

# விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.12

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து நேற்று இரவு பருத்தித்துறை வீதியில் உள்ள எருவன் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நடந்துள்ளது. தாவளை, இயற்றாலையைச் சேர்ந்த 19 வயது இளைஞரே காயமடைந்துள்ளார். அதிவேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-159)

## கொரோனா தொற்றால்...

ளனர் என்று சுகாதார அமைச்சு நேற்றிரவு அறிவித்துள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரும், பத்தேகமவைச் சேர்ந்த 72 வயதுப் பெண் ஒருவருமே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இந்த உயிரிழப்புக்களை அடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரழிந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 598 ஆக அதிகரித்துள்ளது. (எ-இ)

## யாழ்ப்பாண...

அவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் சுகாதாரப் பிரிவினர் உடனடியாக ஈடுபட்டனர். அவர்களில் சிலர் வீடுகளில் இல்லை. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைக்க முன்னரே சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களை மீறி, யாழ்ப்பாணம் நகரத்தில் உள்ள கடைகளில் வர்த்தக நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதையடுத்து அந்த வர்த்தக நிலையங்களுக்குச் சென்று தொற்றாளர்களை தனிமைப்படுத்திய சுகாதாரப் பிரிவினர், அந்தக் கடைகளையும் மூடியுள்ளனர். (எ-26)

## சித்திரை ...

அவதான நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளில் இருந்து வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் தென்கிழக்கு முதல் கிழக்கு வரையான திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

காற்றின் வேகமானது 20 தொடக்கம் 30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

## அரச, தனியார்...

தாலும், 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் தமிழ், சிங்களப் புத்தாண்டு விடுமுறைக் காலம் என்பதாலும், அந்தத் தினங்களுக்கு இடைப்பட்ட 12 ஆம் திகதியையும் விசேட விடுமுறை தினமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்த விடுமுறை தொடர்பாக தெளிவுபடுத்தி, விசேட அறிக்கையைப் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதற்கமைவாக அரச ஊழியர்களுக்கு மாத்திரமே இன்றைய விசேட விடுமுறை பொருந்தும். அரச மற்றும் தனியார் வங்கிகள் வழமைபோன்று இந்தத் தினத்தில் இயங்கும். வர்த்தக நடவடிக்கைகளும் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-422)

## கொரோனாத் தொற்றால்...

மருத்துவமனையின் 7ஆம் விடுதியில் சிகிச்சை பெற்றவர்களுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னதாக தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததை அடுத்து, விடுதி தற்காலிகமாக மூடப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த நோயாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மேலும் பலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்து கடந்த சில தினங்களுக்கு முன்னதாக தொற்று உறுதிசெய்யப்பட்ட ஐவர் முல்லேரியா ஐடீஎச் மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

அவர்களில் பருத்தித்துறை முதலாம் கட்டை பகுதியில் வசித்துவரும், மயிலிட்டியைச் சேர்ந்த இராசரட்ணம் வெற்றிக்கொடி என்ற முதியவரே உயிரிழந்துள்ளார். இவருக்கு நீரிழிவு நோய் உள்ளிட்ட வேறு நோய்த் தாக்கங்கள் அதிகமாக இருந்த நிலையிலேயே கொரோனாத் தொற்றும் ஏற்பட்டிருந்தது.

உயிரிழந்த நபரின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு முதல்கட்டமாக மேற்கொள்ளப்பட்டபரிசோதனையில்தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட போதிலும் அவர்களது தனிமைப்படுத்தல் காலம் நாளைவரை நடைமுறையில் உள்ளது.

இதேவேளை உயிரிழந்தவரது உடல் உறவினர்களிடம் கையளிக்கப்படமாட்டாது என்பதால், சுகாதார தரப்பினரது அறிவுறுத்தலுக்கமைவாக அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலர் முல்லேரியாவுக்கு புறப்பட்டுள்ளனர். (ஒ-26)

## கலப்பட மது...

யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் இந்தக் கலப்பட மதுபான உற்பத்தி நடந்து வந்துள்ளது. நேற்றுப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் இந்த உற்பத்தி நிலையம் சிக்கியது.

அங்கிருந்த பொருள்கள் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. விசாரணையின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் உஜித் எம்.பி. லியனகேயின் கீழான மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் ஆர்.பிரதீப் தலைமையிலான பொலிஸ் அணியே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (எ-26)

## கொரோனாக் கட்டுப்பாட்டில்...

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இறுக்கும் செயற்பாடுகள் இன்று (நேற்று) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வர்த்தக நிலையங்கள், பொதுப்போக்கு வரத்துக்கள், பொது இடங்கள் மற்றும் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். சுகாதார அமைச்சு வழங்கிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறுவோருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)

## வடக்கில் நேற்றும்...

யவர்கள் என 431 பேரின் மாதிரிகள் கடந்த வெள்ளிக்கிழமை பெறப்பட்டிருந்தன. அவர்களின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோனைக்காக முல்லேரியா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில், அந்த முடிவுகள் நேற்று மதியம் வெளியாகியிருந்தன. அவர்களில் 34 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 22 பேர் யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள். ஏனைய 12 பேர் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்ட வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் ஆகியவற்றில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கிளிநொச்சி தனிமைப்படுத்தல் மையத்தில் உள்ள மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும், மன்னார் மாவட்டத்தில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த ஐவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியாவில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று, வவுனியா திரும்பியுள்ள நிலையிலேயே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார். மன்னாரில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர்கள் பள்ளிமுனை கிராமத்தில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். (எ-26)

## ஒன்றரை வருடங்கள்...

ப்பட்டவர்களிடம் இருந்து 15 மின் நீர்ப்பம்பிகள், வாகனச் சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மோட்டர், புல் வெட்டும் இயந்திரம் என்பவை உட்படப் பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்கள் தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒன்றரை ஆண்டுகளாக இவர்கள் திருட்டில் ஈடுபட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் இன்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த ஹொட்டகச்சியின் வழிகாட்டலில், தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மொர்சான் இந்துக்கலா சில்வா மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஆனந்த சுமணசிறி ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவே இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டது. (எ-26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19 . 12 . 1940

மறைவு
29 . 03 . 2017

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் நவாலியூரை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி


## வள்ளியம்மை நடேசு

எம் உயிரின் பாதி உங்களுடன்
- உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே நீர் தந்த அன்பின்
நிழலில் வாழும் உங்கள்

"வள்ளியம்மை இல்லம்"
நவாலி அரசடி சந்தி,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்
077 615 5039

# மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 09 . 1943

மறைவு
09 . 04 . 2021

## திரு. சுப்பிரமணியம் நவரட்ணம் தெட்சனானந்தமூர்த்தி

(S.N.T. மூர்த்தி ) ஓய்வு பெற்ற உதவிப்பாதுகாப்பு அத்தியட்சகர் - மக்கள் வங்கி வடபிராந்தியம் , ஓய்வு பெற்ற முன்னைநாள் முகாமையாளர் றோயல் தியேட்டர் - வவுனியா, முன்னைநாள் பகுதி நேர விற்பனைப்பிரதிநிதி இலங்கை, உலோகப்பொருட் கூட்டுத்தாபனம் ( LANKA LOHA ) வடமாகாணம், முன்னைநாள் பகுதி நேர Reserve Sub - Inspector of Police - வன்னிபிராந்தியம் , முன்னைநாள் பகுதி நேர நிர்வாக முகாமையாளர் மனோகரா தியேட்டர் - யாழ்ப்பாணம் , மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம் யாழ்ப்பாணம், வன்னிப்பிராந்திய ஒருங்கிணைப்பாளர்)


"நவம்ஸ்" பிள்ளையார் கோவில் வீதி. சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் "நவம்ஸ்" ஜோசப்வாஸ் வீதி. இறம்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாக்கொண்ட திரு. தெட்சனானந்த மூர்த்தி (S.N.T மூர்த்தி) அவர்கள் கடந்த (09.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - திலோத்தமை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்றவர்களான இராசரட்ணம். சிவசுப்பிரமணியம். ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வரட்ணத்தின் (செல்வம்) அன்புக் கணவரும். சுதர்சினி (ஆசிரியர் - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ரேவதி (வைத்தியர் R.D.H.S - வவுனியா) மயூரன் (மக்கள் வங்கி - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும். கோகிலதாசன் (ஆசிரியர்- வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்). அற்புதராஜா (பீடாதிபதி யாழ் . பல்கலைக்கழக பொறியியல் பீடம் - கிளிநொச்சி). பிரியதர்ஜினி (ஹோட்டல் ஓவியா - வவுனியா ) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கோசிகன். அபிசிகன். நர்மிதா. ஜதுர்சன். சப்தனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.04 2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 .00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இறம்பைக் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு
20 . 11 . 1947

இறப்பு
07 . 04 . 2021

## வேலுப்பிள்ளை செல்வராசன்

(இராசப்பன்)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரம் கல்மடு குமரபுரம் பரந்தனை வதிவிடமாகவும் தற்போது பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வராசன்(இராசப்பன்) கடந்த 07.04.2021 புதன் கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கனகம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும். மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சசிகலா, சசிதரன், வளர்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தன், ராஜரூபி, இளங்கோவன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கனகராசா, கமலவேணி, காலஞ் சென்ற விஜயரெத்தினம், காலஞ்சென்ற அன்னசோதி, யோகம்மா, மங்கை யற்கரசி, நாகலட்சுமி, கேதீஸ்வரராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோ தரரும், விக்ரன், விவியன், விறம்யா, சன்ஜய், றித்திக், பிரவின், அபிஷா ஆகியோ ரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2021) செவ்வாய்க்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 7711

# மரண அறிவித்தல்



மண்ணில்
06 . 04 . 1956

விண்ணில்
10 . 04 . 2021

## திரு.நாகன் துரைசிங்கம்

(Jaffna ஸ்ரோஸ் உரிமையாளர் - ஜேர்மனி)

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தினை பிறப்பிடமாகவும் ஜேர்மனி நாட்டின் கம் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் துரைசிங்கம் நேற்றுமுன்தினம் (10.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகன் - சீதேவி தம்பதியரின் அன்பு புதல்வரும், துரைசிங்கம் இராஜபரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், துஜின், ரஜிந்த், துஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஏஞ்சலின் அவர்களின் மாமனும், காலஞ் சென்ற இராசதுரை, தம்பித்துரை, தவமணி, சின்னராசா, தங்கராசா, விமலாவதி, ஆகி யோரின் அன்புத் சகோதரரும், ஆன் ஜெஸ்லினின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2,B.A தம்பிலேன்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 430 7775

தகவல்:
நாகன் சின்னராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மீதான தடையை நீக்குகிறது அமெரிக்கா!

## பேச்சு புதிய அத்தியாயம் என அதிபர் ரவுஹானி பெருமிதம்

**தெஹ்ரோன், ஏப். 12**

**ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா நீக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. இதையடுத்து வியன்னாவில் நடைபெற்ற பேச்சு இரு நாடுகளின் உறவில் புதிய அத்தியாயம் என்று ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அந்த நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதைச் செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது. அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளன என்று தெரிவித்து அதிலிருந்து விலகினார். மேலும் ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்து வந்தார்.

இதற்கு பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறியது. இந்நிலையில் தெஹ்ரோனுக்குத் தெற்கே அணுவாயுதங்களுக்காக யுரேனியம் செறிவூட்டும் பணியை ஈரான் கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கியது.

இதையடுத்து அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் ஈரானின் போர்த் தந்திரி ஹசிம் சுலைமானி கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. ஆக, ஒரு போர்முனையாக அமெரிக்கா ஈரான் விவகாரம் இருந்த நிலையில் சர்வதேச நாடுகளின் அழைப்பை ஏற்று வியன்னாவின் இரு நாடுகளும் அண்மையில் பேச்சு நடத்தின. இந்தப் பேச்சின் அடிப்படையில் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் தற்போது ஓரளவு இணக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ம)

**வேலையாள் தேவை (பெண்)**

அலுவலக கணக்குப் பதியுனர் (கணினி) தேவை. கணினி அறிவு மற்றும் க.பொ.த (சா/த) சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது.

**071 130 5556**

**வீனஸ் என்ரபிறைசஸ்**
**இல. 110, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

FLC FRENCH LANGUAGE CENTRE

சர்வதேச டிப்ளோமா(DELF A1,A2,B1,B2)

பிரெஞ்ச் Courses

V. Jegan(Trained in France - 2007)

19, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781

23/2 சோமசுந்தரம் அவெனியு
சுண்டிக்குளி. 0779789456
(கச்சேரி Fuel Station அருகில்)

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

### இராணுவத்துக்கு எதிரான போர்

# 50 சிறுவர்கள் இதுவரை மியான்மரில் கொலை!



நைபிட்டோ, ஏப். 12

இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட 50 சிறுவர்கள் மியான்மரில் இதுவரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று மியான்மரில் செயற்படும் தன்னார்வ அமைப்பொன்று அறிவித்துள்ளது.

மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆயுத முனையில் அகற்றியது மியான்மர் இராணுவம். இதையடுத்து அங்கு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டது. அத்துடன் அடுத்த ஓராண்டுக்கு அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் என்றும் இராணுவம் அறிவித்தது.

இதையடுத்து இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றது. மக்களின் போராட்டம் இராணுவத்தால் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டு வருகின்றன. இதுவரை அங்கு சுமார் 800 பேர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 50 பேர் சிறுவர்கள் என்று தற்போது குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

இளவரசர் பிலிப் மறைவை அடுத்து பிரிட்டனின் பக்கிங்ஹாம் அரண்மனையில், பிரிட்டன் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. (ம)



## மரண அறிவித்தல்



### திருமதி தனபாலசிங்கம் புஸ்பராணி

வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் புஸ்பராணி அவர்கள் நேற்று (11.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயரஞ்சினி, ரஞ்சிதமலர் (ஜேர்மனி), குமாரதாசன், கிருஸ்ணதாசன், கலாநிதி விநாயகதாசன் (சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியற்றுறை, பேராதனைப் பல்கலைக்கழகம்), கமலதாசன், சத்தியகலா, கவிதாசன், விமலதாசன், ராதிகா, றதீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஸ்ணபாலு, ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி), காலஞ்சென்ற லக்சிகா மற்றும் தட்சாயினி, சாதனா, கிருஷாந்தினி, பிரதீபன், சுபாசினி, மணிமாறன், திசானி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2021) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் வாதரவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**வாதரவத்தை,**
**புத்தூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361... ...க்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.